சட்டமியற்றும் அமைப்பு பெற்றதாக இருப்பதால், அதை ஒரு தனித் தொகுதியாக மாற்றித் தரவேண்டும் என்று கேட்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

3. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

(ஆ) பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு—"இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க் கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன—

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27-ம் தேதி (வெள்ளிக்கிழமை)—

காலையும், மாலையும் பேரவைக் கூட்டம் இருக்கும். மாலை 4-00 மணி முதல் பேரவைக் கூட்டம்.

ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.

1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28-ம் தேதி (சனிக்கிழமை)—

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதிலுரை.

வழக்கம் போல் பேரவை காலை 9-00 மணிக்குக் கூடும்.

இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்."

பின்னர், பிற்பகல் 1-30 மணிக்கு பேரவை ஒத்தி வைக்கப்பெற்றது.

6. அவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

3. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் விதிகளில் சிறு திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 14—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 13-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர்கள் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 ஆம் பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS